பாடம் 6

## பாபேல் (Genesis 9:11)

இந்த பாடத்தில் நீங்கள், தேவ பிள்ளைகளுடைய வாழ்க்கை எப்படி ஜலப்பிரளயத்திற்கு பின்பு மறுபடியும் உருவானது என்று கற்றுக் கொள்ளப் போகிறீர்கள். தேவன் ஒரு உடன்படிக்கையை, (கட்டுப்பாடுடனான ஒப்பந்தம்) - நோவாவோடும், அவன் குடும்பத்தோடும் மற்றும் உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளோடும் செய்தார். இந்த விலையேற பெற்ற வாக்குத்தத்தத்தை அவர்கள் தேவனிடமிருந்து பெற்றிருந்தாலும், நாட்கள் செல்ல செல்ல மறுபடியுமாக பாவம் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் தேவனில்லாமலும் அவருடைய திட்டத்தை, அலட்சியம் செய்தும் பாவத்தில் வாழ ஆரம்பித்தனர்.

அந்த ஜலப்பிரளயத்திற்கு பின்பு, தேவன் நோவாவிடம் "என்னுடைய ஆசீர்வாதத்தின் அடையாளமாக நீங்கள் பலுகிப் பெருகி மறுபடியும் பூமியை ஜனங்களால் நிரப்புபவர்களாகவும் இருப்பீர்கள். இப்பொழுது இருந்து மிருகஜீவன்கள் உங்களுக்கு பயப்படும். இருந்த போதிலும் நீங்கள் அவைகளுக்கு பொறுப்பாய் இருக்கிறீர்கள். நீங்கள் இப்பொழுது மிருகங்களையும், தாவரங்களையும் உண்ணலாம். நடமாடும் அனைத்து மிருகங்களும், எல்லா வகையான பச்சை தாவரங்களும் உங்களுக்கு உணவாகும். ஆனால் நீங்கள் மனிதரை கொலை செய்யக்கூடாது. ஏனென்றால் அவர்கள் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவர்கள். நீங்கள் அநேக பிள்ளைகளை பெற்று திரும்பவும். இந்த பூமியை ஜனங்களால் நிரப்புங்கள்'' என்றார். மேலும் தேவன் "நீங்கள் மாமிசத்தை புசிக்கும் போது அதின் உயிராகிய இரத்தத்தோடு புசிக்க வேண்டாம். இந்த உடன்படிக்கையை மீறுகிற ஒவ்வொரு மனிதர்களையும் ஒவ்வொரு ஜீவன்களையும் நான் பழிவாங்குவேன். நீங்கள் மற்றவரின் இரத்தத்தை சிந்தினதால் அவர்கள் மரித்தால் உங்களுடைய இரத்தமும் மற்றவரால் சிந்தப்பட்டு நீங்கள் மரிப்பீர்கள். ஏனெனில் எல்லா மனிதனும் தேவனின் சாயலாகவும் அவரைப் போலவும் உண்டாக்கப்பட்டிருக்கிறான்" என்றார்.

தேவன் நோவாவோடும் அவன் குடும்பத்தோடும் "நான் உங்களோடு என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். மேகத்தை பாருங்கள் அதில் என்னுடைய வானவில் இருக்கும். இந்த வானவில் தான் எனக்கும் பூமியிலுள்ள எல்லா உயிர்களுக்கும் இடையேயான உடன்படிக்கையின் அடையாளம். அது என்னுடைய இரக்கத்தையும் என் வார்த்தையின் உண்மையையும் உனக்கு நினைவூட்டும்.நீயும் நானும் அந்த வானவில்லை பார்க்கும் போது நாம் இருவரும் இந்த வாக்குத்தத்தத்தையும் அதன் நிபந்தனைகளையும் நினைவு கூறுவோம். மறுபடியும் ஜலப்பிரவாகம் வந்து பூமியின் மக்களை அழிக்காது. இந்த ஒப்பந்தம் ஒரு நித்திய வாக்குத்தத்தமும் இனி வரும் எல்லா தலைமுறைகளுக்கும் ஒரு உடன்படிக்கையாகவும் உள்ளது'' என்றார். (ஆதி 9:1-7) ஜலப்பிரளயத்திற்கு பின்பு நோவா 350 வருடங்களுக்கு மேல் வாழ்ந்தான். அவன் ஆயுசின் வருடங்கள் 950. அதின்பின்பு அவன் மரித்தான்.

காலம் செல்ல செல்ல ஜனங்களின் எண்ணிக்கை அதிகரித்தது. சேம்,காம்,யாபேத் என்பவர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் தேசமெங்கும் பரவினார்கள். அவர்கள் எல்லோரும் இன்னமும் ஒரே பாஷையை பேசி வந்தார்கள். பாபிலோன் தேசத்தில் குடியிருந்த மக்கள் தாங்கள் ஒன்றாயிருப்பதால் தங்களுடைய வல்லமையும் பெரிதாயிருக்கும் என நினைத்தார்கள். அவர்கள் தேவன் சொன்னது போல உலகமெங்கும் பரவி செல்லவில்லை. அவர்கள் ஒரு பட்டணத்தையும் ஒரு கோபுரத்தை செங்கல்லாலும் நிலக்கீலாலும் கட்டினார்கள். அது வானத்தை எட்டும் அளவிற்கு இருந்தது. எல்லோரும் பார்க்க கூடிய அளவில் உயரமாக காணப்பட்டது. அவர்களின் பெருமையினால் அவர்களுக்கு பேர் உண்டாகவும்,பூமியின் மீதெங்கும் சிதறிப் போகாமல் இருக்கவும் அதை விரும்பினார்கள். அந்த நாட்களிலே வானளாவிய இத்தகைய கோபுரங்கள் அந்நிய தேவர்களின் கோயிலாக காணப்பட்டது. அவர்கள் தங்கள் அகந்தையினாலும், சுயநலத்தினாலும் தங்களுக்கு பேருண்டாக்கி தேவனின் படைப்புகளில் ஆதிக்கம் செலுத்த விரும்பினார்கள். அவர்களுடைய முயற்சிகள் தேவனுடைய சித்தமாக இல்லாமல் மனுஷருடைய சித்தமாய் இருந்தது.

எனவே தேவன் அந்த கோபுரத்தையும் அவர்களின் கலக குணம் நிறைந்த இருதயத்தையும் பார்த்து "ஜனங்கள் என்னுடைய கற்பனைகளுக்கு மீண்டும் கீழ்படியவில்லை. அவர்கள் தொடர்ந்து சேர்ந்திருந்தால் கலகம் பண்ணி தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டாமல் தங்களுடைய

ராஜ்ஜியத்தையே கட்டுவார்கள். பிறகு தாங்கள் செய்ய நினைத்தது ஒன்றும் தடைபடமாட்டாது என்று நினைக்கிறார்கள். நாம் இறங்கி போய், ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு அவர்கள் பாஷையை தாறுமாறாக்குவோம்" என்றார் (ஆதி 11:7)

உடனே திடீரென்று ஜனங்கள் வித்தியாசமான பல பாஷையை பேச ஆரம்பித்தனர். அவர்கள் பேசியதை ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ள முடியாமல் அங்கும் இங்கும் குழப்பமடைந்து ஓடி திரிந்தனர் "என்ன நடந்து கொண்டிருக்கிறது?" என்று ஒரு மனிதன் சத்தமிட்டபோது அவனை சுற்றி உள்ள மனிதர்களுக்கு அவன் என்ன சொல்லுகிறான் என்று புரியவில்லை. பின் மெதுவாக ஒவ்வொரு மக்களும் தாங்கள் பேசுகின்ற பாஷையையே பேசுகிற பிறரை தேடி கண்டுபிடித்தனர். ஆனால் அவர்கள் எல்லாரும் சேர்ந்து ஓரே கூட்டமாய் ஒற்றுமையாக வாழ முடியவில்லை. அவர்கள் பல பாஷைகளைப் பேசும் சிறு கூட்டங்களாக இப்பொழுது காணப்பட்டார்கள். ஏமாற்றமும் பயமும் கொண்ட மக்கள் தாங்கள் பேசுகிற பாஷையை பிறர் பேசாதபடியினால் ஏமாற்றமும் பயமும் கொண்டு சிறு குழுக்களாக பிரிந்து மற்றவர்களை விட்டு விலகி சென்றார்கள். அங்கிருந்து தேவன் பூமியின் எல்லா பாகங்களுக்கும் அவர்களை சிதறடித்தார். இந்த கட்டி முடிக்கப்படாத கோபுரம் 'குழப்பத்தின் கோபுரம்' அல்லது 'பாபேல் கோபுரம்' என்று அழைக்கப்பட்டது.

அந்த காலகட்டத்தில் தான் சேமின் பேரனுடைய மகன் பிறந்தான். அவன் பெயர் ''பேலேகு'' அதின் அர்த்தம் பிரிவினை. ஏனென்றால் அவன் பிறந்த சமயத்தில் தான் பூமி பல பாஷைகளால் பிரிக்கப்பட்டது. மக்கள் தேவனை விட்டு விக்கிரக ஆராதனைக்கும் சூனியங்களுக்கும் பொல்லாத வழிகளுக்கும் திரும்பினார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் ரோமருக்கு எழுதிய முதலாம் நிருபத்தில் அவர்களுடைய நிலையைக் குறித்து இவ்வாறு எழுதியுள்ளார். "அவர்கள் தேவனை அறிந்தும் அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பைத்தியக்காரராகி அழிவில்லாத தேவனுடைய மகிமையை, அழிவுள்ள மனுஷர்கள், பறவைகள், மிருகங்கள், ஊரும் பிராணிகள் ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள்'' என்கிறார். (ரோ 1:21-23)

தேவன் மனிதர்களை தன் வசம் வைத்துக்கொள்ள, பேலேகின் சந்ததியில் தோன்றிய ஆபிரகாமை தனக்காக தெரிந்து கொள்ளும் வரை பாவத்தை உலகத்திலே அனுமதித்தார். ஆபிரகாம் தேவனுடைய நண்பன் என்று அழைக்கப்பட்டான்.

இந்த பாடம் முக்கியமானது ஏனென்றால் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்று தேவன் ஏற்கனவே வரையறுத்து வைத்ததினால் ஒவ்வொருவரும் தாங்கள் வாழும் வாழ்க்கைக்கு தாங்களே பொறுப்பேற்கும்படி தேவன் செய்துள்ளார் என்பதை கற்றுக்கொடுக்கிறது. நாம் அவருக்கு கீழ்படிய மறுத்தால் நாமும் நம்முடைய பாவத்திற்கு நியாயந்தீர்க்கப்படுவோம்.

இந்த பாடம் சொல்லுகின்ற முக்கியமான உண்மை என்னவென்றால், தேவன் மனிதர்களுக்கு சுய விருப்பத்தை செய்யக்கூடிய, அதாவது சுயமாய் தெரிந்தெடுக்கும் வல்லமையை கொடுத்துள்ளார். சிலர் தேவனுக்கு ஊழியம் செய்வதையும் அவரைப் பிரியப்படுத்துவதையும் தெரிந்து கொள்கிறார்கள். மற்றவர்கள் தேவனுக்கு எதிர்த்து நின்று அவருடைய அதிகாரத்திற்கு சவால் விட்டு விலகி விடுகிறார்கள். தேவனுடைய வழியை தெரிந்தெடுத்தவர்கள் அவருடைய பிரசன்னத்தை அறிவார்கள். தங்கள் சொந்த வழியிலேயே செல்ல விரும்புகிறவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பை அடைவார்கள்.

இந்த பாடத்தை திரும்பி பார்க்க பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கவும்.

1. தேவன் மீண்டுமொரு வெள்ளத்தை அனுப்புவது பற்றி என்ன கூறினார்? (6 நொடிக்கு பிறகு)

   'தேவன் மீண்டும் உலகத்தை வெள்ளத்தால் அழிப்பது இல்லை என்று வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

2. தேவனுடைய பிள்ளைகளுக்கு வாக்குத்தத்தத்தின் அடையாளமாக எது வானத்தில் உள்ளது? (6 நொடிக்கு பிறகு)

   'வானவில் என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்.

3. கலகமும் பெருமையும் நிறைந்த கோபுரத்தை கட்டினவர்களுக்கு தேவனின் பதில் என்ன? (6 நொடிகள் பிறகு)

'தேவன் அவர்கள் பாஷையை தாறுமாறாக்கி பூமியின் வெவ்வேறு இடங்களுக்கு பிரிந்து போக செய்தார்' என்று நீங்கள் சொல்வீர்களானால் அது சரியான பதில்

இதில் உங்களுக்கான வீட்டுப்பாடம் என்னவென்றால், குறைந்தது மூன்று முறையாவது இந்த பாடத்தைக் கேளுங்கள். நீங்கள் இந்தக் பாடத்தை கேட்கும் போது இது எப்படி நடத்திருக்கும் என்று உங்கள் மனதில் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு உங்கள் சொந்த வார்த்தையிலே திரும்ப சொல்லுங்கள். பாடத்தை திரும்ப திரும்ப கேட்டு சொல்லிப் பாருங்கள். நீங்கள் சரியாக சொல்லுகிறீர்கள் என்ற நம்பிக்கை உங்களுக்குள் வரும் வரைக்கும் சொல்லிப் பழகுங்கள். அதற்காக 45 நிமிடம் ஒதுக்கி கற்றுக் கொள்ளுங்கள்.

இந்த பாடத்தில் சொல்லப்பட்டிருக்கும் பாபேல் கோபுரத்தை பற்றி கேட்டறியாத ஒருவருக்கு இந்த பாடத்தை கற்று கொடுத்து பின்வரும் கேள்வியை கேளுங்கள். "மனிதர்கள் தேவனைவிட்டு விலகி ஓடும் போது தேவனுடைய நியாயத்தீர்ப்பு வரும் என்பது உண்மைதானா?". அவர்களுடைய பதிலை பெற்ற பின்பு இயேசு ஒருவரே தேவனின் நியாயத்தீர்ப்பிலிருந்து தப்பிக்க வழி காட்ட முடியும். இந்த தண்டனை ஒருவேளை இந்த வாழ்க்கையில் காணப்படாமல் போகலாம். இப்பொழுது பாவத்தை அறிக்கை செய்து விட்டு விடாவிடில், அடுத்த வாழ்க்கையில், அதாவது மரணத்துக்கு பின் தண்டனையை அனுபவிக்க நேரிடும்.

இயேசுவின் மரணமும் அவருடைய இரத்தத்தால் மூடப்படுவதுமே தேவனுடைய நியாயத்தீர்ப்பிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ள வழி செய்யும்.

பாடம் முடிந்தது